பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 15உ (31—8—67) வியாழன் ★ வெளியூர்: ஆவணி 16உ (1—9—67) வெள்ளி [இதழ்: 66

'அசாம் அசாமியருக்கே!'

நாங்கள் இந்தியராக இருந்ததில்லை-- இருக்கவும் விரும்பவில்லை-- இருக்கப் போவதுமில்லை!

பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் ஒரு பிரிவினை முழக்கம்!

நாகாலாந்து—நேபா பகுதிகள் ஓரமாக உள்ள அசாம் மாநிலத்தின் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில், புதிய பிரிவினைக் கிளர்ச்சி ஒன்று துவங்கப்பட்டிருப்பதாக ஷில்லாங் நகரத்துச் செய்தி ஒன்று கூறுகிறது.

'சிவசேனு' அமைப்பைப் போன்ற 'லசெட் சேனு' என்ற பெயரில் துவங்கப்பட்டுள்ள இந்தப் புதிய இயக்கம், 'அசாம் அசாமியர்களுக்கே' என்ற முழக்கத்தை அடிப்படைக் கொள்கை யாக அறிவித்திருக்கிறது!

பிரிவினைக் கொள்கைகளைக் கொண்ட விளம்பரங்கள், துண்டு வெளியீடுகள் ஆகியனவற்றையும் இந்த அமைப்பு வெளியிட்டிருக்கிறது!

அவைகளுள் ஒன்று, 'நாங்கள் ஒருபோதும் இந்தியராக இருந்ததில்லை—இருக்கவும் விரும்பவில்லை—இனி இருக்கப் போவதுமில்லை; அசாம் அசாமியர்களுக்கே' என்று கூறுகிறது!

'இந்தி'யா-'இந்தியா'வா?

ரிசர்வ் பாங்கியுடன் மோதுகிறது உத்தரப் பிரதேச அரசு!

கடிதப் பிரச்சினை மேலும் வலுக்கிறது

"ஒன்று—இந்தியில் மட்டுமே எழுதப்படும் கடிதங்களை இந்திய ரிசர்வ் பாங்கி ஏற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது நான் பதவி விலக வேண்டும்"

என்று, 'கடிதப் பிரச்சினை'யில் ரிசர்வ் பாங்கியினை எதிர்த்து, மொழிவெறிப் போர் தொடுத்திருக்கிறார்—உத்தரப்பிரதேச நிதி அமைச்சர் ராம் சுவரூப் வர்மா!

அரசின் முடிவுப்படி, அக்டோபர் 2-ந் தேதியிலிருந்து தனது இலாகா இந்தி மொழியில் மட்டுமே எவ்விதக் கடிதப் போக்குவரத்தினையும் மேற்கொள்ளுமென்றும், மற்ற எந்த மொழியிலும் எழுத முடியாது என்றும் அவர் கூறியிருக்கிறார்!

சில நாட்களுக்கு முன்பு இந்தி மொழியில் மட்டும் வந்த கடிதத்தை 'ஆங்கில மொழிபெயர்ப்புடன் அனுப்பி வைத்தால்தான் கவனிக்க இயலும்' என்று இந்திய ரிசர்வ் பாங்கியின் லக்னோ கிளை குறிப்பிட்டு இந்தியில் எழுதப்பட்ட கடிதம் திருப்பி அனுப்பப்பட்டதை யொட்டியே உத்தரப் பிரதேச அமைச்சர், மேற்கண்டவாறு எதிர்ப்புக் குரல் விடுத்துள்ளார்!

பொதுவாகத் தங்களுக்கு வரும் எல்லாக் கடிதங்களையும் ஆங்கிலத்திலேயே எழுத வேண்டுமென்றும், இந்தியில் எழுதப்பட்டால் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பை அத்துடன் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் ரிசர்வ் பாங்கி, உ. பி. அரசுக்கு அறிவித்திருந்தது.

"இந்தி மொழியில் மட்டுமே தான் கடிதம் எழுத முடியும்; அதற்கு இணையான ஆங்கில மொழி பெயர்ப்பினையும் உடன் அனுப்புவதென்பது, நடைபெற இயலாததாகும்" என்று உ. பி. அரசின் நிதியமைச்சர்—'சவால்' விடுக்கும் தோரணையில்—பதிலளித்துள்ளார்!

உண்மைக்கதை

இளம்பெண் ஏலம் விடப்பட்டாள்!

வாங்கிய கிராமவாசி விருந்தும் நடத்தினுன்!

மாராட்டிரத்திற்கு அருகிலுள்ள மத்தியப் பிரதேச எல்லையோரக் கிராமமான 'பின்ரி'யில், ஓர் இளம் வயதுப் பெண் ஏலம் விடப்பட்டிருக்கிருர்!

மனைவியின் நடத்தைமீது சந்தேகப்பட்ட கணவன், அவளைப் பொது ஏலத்தில் ரூ. 550-க்கு விற்றிருக்கிருன்!

மற்ருெரு கிராமத்துக்காரன் அவளை வாங்கித் தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்ருன்!

வேற்றுப் பெண்ணை—அதுவும் ஏலத்தில் வாங்கிவந்த குற்றத்துக்காக, அவனது சாதியைச் சேர்ந்த பஞ்சாயத்துக்காரர்கள், அவனுக்கு ரூ. 250 அபராதம் விதித்தனர்!

தொகையைக் கட்டிய அவன், வாங்கிவந்த பெண்ணை, 'மனைவி' என்று அறிவித்து, பெரிய விருந்து ஒன்றும் வைத்திருக்கிருன்!

மீண்டும் வானொலிப் பிரச்சினை--- இப்போது பெங்களூரில்!

பேச்சு ஒலிப்பதிவு ஆயிற்று---ஆனல் ஒலிபரப்பப்படவில்லை!

எம். எஸ். கிருஷ்ணன் என்ற வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரின் பேச்சு ஒன்றினை, அனைத்திந்திய வானொலியின் பெங்களூர் நிலயம் ஒலிபரப்பவில்லை!

ஆகஸ்டு 10-ம் நாள், 'திட்டம் எப்படி இருக்க வேண்டும்' என்ற தலைப்பில் அவரது பேச்சு ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

ஆகஸ்டு 13-ந் நாள் அது ஒலிபரப்பாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது; ஆனல் ஒலிபரப்பாகவில்லை!

'அமெரிக்க மற்றும் ஏகாதிபத்தியவாதிகள்' — 'இந்திய அரசின் திவாலான நிலை'— என்பன போன்ற சொற்களை அவர் பயன்படுத்தியிருப்பதால், உரை, டில்லியிலுள்ள மேலதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகப் பெங்களூர் வானொலி நிலயத்தினர் சமாதானம் கூறியுள்ளனர்.

"பேச்சினை ரத்து செய்தோம் என்ற பேச்சுக்கு இடமில்லை; ஒலிபரப்பு செய்வதா இல்லையா என்ற முடிவு இனித்தான் எடுக்கப்பட இருக்கிறது" என்று அவர்கள் சார்பில் மேலும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இந்திரா அமைச்சரவையில் ஓர் அதிசயம்!

'காபினெட் விவாதம்' இப்போதுதான் முதன் முதலாக நடைபெறுகிறது

இந்திரா காந்தியின் புதிய அமைச்சரவை பொறுப்புக்கு வந்து ஆறு மாதங்களாகின்றன!

இதுவரையில், 'காபினெட்' முழுமையும் சேர்ந்து ஒரு முக்கியப் பிரச்சினை பற்றிக்கூட விவாதிக்கவில்லை!

பெரும் பகுதி நாட்கள், நீண்ட நாட்களாக நடந்து முடிந்த பாராளுமன்றக் கூட்டத் தொடரில் போய்விட்டன!

அப்போதெல்லாம் அமைச்சர்கள், பாராளுமன்றப் பிரச்சினைகளிலும், மற்ற பிற நடவடிக்கைகளிலும் மட்டுமே கவனம் செலுத்தினர்!

விவாதம்—முடிவுகள் எடுப்பது போன்றவைகள், 'காபினட்' துணைக் கமிட்டிகளினுல் கவனிக்கப்பட்டு வந்தன!

இப்போதுதான்—இன்றும்--வருகிற செப். 3, 4-ந்தேதிகளிலும் 'காபினட்' முழுமையும் கூடி, தேசாயின் பொருளாதாரத் திட்டங்கள், மொழிப் பிரச்சினை, பீகார்—காஷ்மீர் கலவரங்கள் பற்றி விவாதிக்க இருக்கிறது!

காணேம்!

150 பேர் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு முழு இரயில் காணமற்போய்விட்டிருக்கிறது—ஜப்பானில்!

பயணிகளில் பெரும் பகுதியினர், மாணவர்கள்!

'யமகடா' என்ற மாவட்டத்திலுள்ள 'கடமி' என்ற நிலயத்திலிருந்து புறப்பட்ட இரயிலைப் பற்றி, அதற்குப் பின்னர் எந்தவிதத் தகவலும் இல்லை—என்று அதிகாரிகள் கைவிரித்துள்ளனர்!

இப்பகுதியில் பயங்கரமான வெள்ளப்பாழ் ஏற்பட்டிருப்பதால் இரயில் அதற்கு ஆளாகிவிட்டிருக்கிறது!

'நவஜீவன் சங்கம்' துவக்குகிருர் குல்சாரிலால் நந்தா?

குருக்ஷேத்திரத்தில் ஆசிரமம் --- புதிய கொள்கைகள் அறிமுகம்

முன்னுள் மத்திய அமைச்சர் முழுத் துறவி ஆகிருர்?

"முன்னுள் மத்திய உள்துறை அமைச்சரான குல்சாரிலால் நந்தா, 'நவஜீவன் சங்கம்' என்ற பெயரில் சமூக சேவை அமைப்பு ஒன்றைத் துவக்கியிருக்கிருர்" என்று முசோரி நகரத்துச் செய்தி ஒன்று கூறுகிறது.

"மக்களின் உரிமை, சனநாயகத்தின் உடைமை ஆகியனவற்றைப் பாதுகாப்பதே இந்தச் சங்கத்தின் கொள்கை" எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"நிர்வாகத்தில் எங்கெங்கு அதிகாரம் தவருகப் பயன்படுத்தப்படுகிறதோ அங்கெல்லாம் இந்த சங்கம் போராடும்" என அவர் அறிவித்துள்ளார்.

குருக்ஷேத்திரத்தில்—ஓர் ஆசிரமத்தில் இந்தச் சங்கம் துவங்கப்பட இருக்கிறது.

நகராட்சிப் பணிமனைகளில் வள்ளுவர் படம்

திருச்சி, ஆக. 29—

நகராட்சிமன்றப் பள்ளிகளிலும் பணிமனைகளிலும் திருவள்ளுவர் உருவப்படத்தை வைக்கும்படி நகராட்சிகளுக்குத் தமிழக அரசு யோசனை தெரிவித்துள்ளது.

இந்தப் படத்தை வைப்பதற்கு ஏற்படும் செலவுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழக உணவுப் பிரச்சினை அக்டோபரில் அகலும்!'

—கூனூரில் அறிஞர் அண்ணு அறிவிப்பு

எப்படி?

தஞ்சையில் அக்டோபர் திங்களில் புரட்சி ஒன்று நடைபெறவிருக்கிறது — 'இரஷ்யப் புரட்சி' அல்ல —'விளைச்சல் புரட்சி'!

நாளை

'நம் நாடு'

இதழில் காண்க!

வட்டிக் கடைக்காரர் கெட்டார் —அப்படிப் பேசினுர் தேசாய் —தமிழகத்தின் கோரிக்கைக்கு!

ஜப்பான் நாட்டுக்காரனுக்குப் பிறந்த கருணைகூட இந்த குசராத் மாநிலத்துக்காரருக்கு இல்லையே!

1958-ல் இந்தியா வாங்கிய கடனுக்கு இப்போது தவணைகளைத் தள்ளிப்போட்டிருப்பதோடு ஜப்பான், வட்டியையும் குறைத்துக்கொண்டிருக்கிறது!

இந்தியாவின் கஷ்டநஷ்டங்கள் டோக்கியோவில் இருப்பவர்களுக்குப் புரிகிறது!

தமிழகத்தின் நிலைமை புதுடில்லிக்குத் தெரியமாட்டேனென்கிறதே!

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 15 31—8—67) வியாழன்

குண்டர் கும்பல்!

'சிவசேனை' என்ற பெயரால் 'குண்டர் கும்பல்' ஒன்று, மாராட்டிர மாநிலத்தில் தலைதூக்கி வளர்ந்துவருகிறது. 'மாராட்டிரம் மாராட்டிரர்களுக்கே' என்பது, அக்'குண்டர் கும்பலி'ன் குறிக்கோள்.

அக்குறிக்கோளை அடைவதற்குப் பொதுவாக மாராட்டிரத்திலும், குறிப்பாக பம்பாய் நகரத்திலும் பல ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறி, பணி பல புரிந்துவரக்கூடிய தென்னக மக்களை அச்சுறுத்துவதையும், துன்புறுத்துவதையும் திட்டமாகக் கொண்டிருக்கிறது அக்குண்டர் கும்பல்!

அக்கும்பலின் திருப்பார்வை, பம்பாய் நகரத்திலிருக்கின்ற பிற மாநிலங்களைச் சேர்ந்த மக்கள்மீதும் விழுந்திருக்கிறது என்றாலும், அக்கும்பலின் முழுப் பார்வையும் தென்னக மக்கள்மீதே விழுந்திருக்கிறது!

இதுவரை, அக்கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி அவதிக்குள்ளாகி இருக்கின்றவர்களில் பெரும் தொகையினர் தென்னகத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். சிவசேனையின் தாக்குதல் பெரிதும் தென்னக மக்களையே குறியாகக்கொண்டது என்றாலும், அச்சேனையின் தாக்குதல்கள் அனைத்தும் இதுவரை தமிழ் மக்கள் மீதே விழுந்து வந்திருக்கிறது!

'சிவசேனை' என்ற பெயரால் இப்படி ஒரு குண்டர் அமைப்பு மாராட்டிரத்தில் உருப்பெற்றுச் செயல்பட்டு வருகிறது என்பது, சில மாதங்களுக்கு முன்பிருந்துதான் வெளிப்படையாகத் தெரிகிறது என்றாலும், இதனுடைய தோற்றம் பல ஆண்டுகளுக்கு முற்பட்டதே ஆகும். பல ஆண்டுக்கு முற்பட்டதாக இருந்திட்டாலும், இந்தச் சிவசேனையின் அட்டூழியங்களும் வெறிச் செயல்களும், சில திங்களுக்கு முன் இரண்டு முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலிருந்துதான் திட்டவட்டமாக வெளிப்படலாயின.

மேற்குறித்த இரண்டு தேர்தல்களிலும், காங்கிரசு வேட்பாளர்களை எதிர்த்துச் சுயேச்சையாக வி. கே. கிருஷ்ணமேனன் போட்டியிட்டார். அவ்விரண்டு தேர்தல்களிலும், மேனனுக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சியை வெற்றிபெறச் செய்ய—காங்கிரசுக் கட்சியுடன் இந்தச் சிவசேனை அமைப்பும் இணைந்து செயல்பட்டிருக்கிறது!

சிவசேனைக்கு, மாராட்டிரக் காங்கிரசுக் கட்சியின் தீவிர ஆதரவு மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் இருந்துவருகிறது என்ற பரவலான குற்றச்சாட்டுக்கு, மேற்குறித்த இரண்டு தேர்தல்களிலும் காங்கிரசுக் கட்சியும்—சிவசேனை அமைப்பும் இரண்டறக் கலந்து பணியாற்றியதே போதிய சான்றாகும்.

காங்கிரசு வேட்பாளர்களை ஆதரித்துப் பணியாற்றும்படி சிவசேனை அமைப்பை காங்கிரசுக் கட்சி கேட்டுக்கொள்ளவில்லை ; தன்னிச்சையாகக் காங்கிரசுக் கட்சியை சிவசேனை ஆதரித்து இருக்கிறது ; இதற்காக, காங்கிரசுக் கட்சி எப்படி குற்றம் செய்ததாகக் கூறமுடியும்—என்ற கேள்வியை, மாராட்டிரக் காங்கிரசுக் கட்சித் தலைமை கூறக்கூடும்.

'இந்தச் சமாதானம் பொருளற்றது' என்பதை, தமிழ் மக்கள் அறிந்தே இருக்கின்றனர். வேறு ஒரு தொடர்பில் இதே சமாதானத்தைத் தமிழகக் காங்கிரசுத் தலைமை, பலமுறை கூறியிருக்கிறது.

தென்னக மக்களைத் தாக்கலாம்—அவர்களுடைய உடைமைகளுக்கு நாசம் விளைவிக்கலாம்—என்ற துணிச்சல் இன்று சிவசேனைக்கு வந்திருப்பதற்குக் காரணமே—அம்மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரசு ஆட்சியினர், அந்தச் சேனைக்குத் துவக்கம் முதலே காட்டிவந்த ஆதரவும் ஊட்டிவந்த ஊக்கமும்தான். சிவசேனையின் இலட்சியத்தைச் சில நாட்களுக்கு முன்னர், மாராட்டிர முதலமைச்சரும், வேறு இரண்டு அமைச்சர்களும் ஆதரித்துப் பேசியிருக்கின்றனர் என்ற உண்மை—சிவசேனையின் கொடுஞ்செயல்களை அதே முதலமைச்சர் இன்று கண்டித்திருப்பதால்—பொய்யாகிவிடாது.

சிவசேனையின் செயலை, முதற்கண் தெரிந்து கொண்டவுடனேயே, மாநில முதலமைச்சர், சட்டப்படி தக்க நடவடிக்கையை எடுத்துக்கொண்டு, சிவசேனையின் வாலை ஒட்ட நறுக்கி இருக்க வேண்டும். இவ்வாறு சிவசேனையின் கொட்டத்தை ஆரம்பத்திலேயே ஒடுக்கவேண்டியதிருக்க, அது பயங்கரமான பேருருவம் பெற்று—தனது நச்சுக் கொள்கைக்குக் கணிசமான ஆதரவைத் தேடிக்கொண்டதற்குரிய துணையும் புரிந்துவிட்டு, இப்பொழுது மாநில முதலமைச்சர், அந்தச் சேனையைக் கண்டிக்க முன்வந்திருப்பது வியப்பளிப்பதாக இருக்கிறது. இப்படிக் கண்டித்திருப்பதில், முதலமைச்சரின் நல்லெண்ணத்தையும் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

சிவசேனையின் அட்டூழியங்களை—அதன் தாக்குதல்களுக்கு ஆளான தென்னக மக்களை நேரில் சந்தித்து உண்மையைத் தெரிந்துகொள்ளச் சென்ற முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உமாநாத் அவர்களும் சிவசேனையைச் சேர்ந்தவர்களால் தாக்கப்பட இருந்ததைக் கொண்டே, பம்பாயிலுள்ள தென்னக மக்களை அதே சிவசேனை வீரர்கள் எப்படித் துன்புறுத்தி இருப்பார்கள்—இனியும் துன்புறுத்தத் திட்டமிட்டிருப்பார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். அவ்விரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிவசேனையைக் குறித்துத் தாங்கள் கேட்டறிந்ததையும் நேரில் கண்டறிந்ததையும் அறிக்கை வாயிலாக—தங்களைத் தூதுவராக அனுப்பிவைத்த—முறையே கழகத் தலைமையிடமும், இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சித் தலைமையிடமும் கொடுத்துள்ளனர் ; அவர்கள், சிவசேனையின் நச்சுக் கொள்கை பற்றியும், ஆடியுள்ள பேயாட்டம் குறித்தும் பல உண்மைகளை அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருக்கக்கூடும்.

வில்சன் அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள்!

17 புதிய சேர்க்கைகள்

இங்கிலாந்து தலைமையமைச்சர் ஹெரால்டு வில்சன், தனது தொழிற் கட்சி அமைச்சரவையில் மீண்டும் பெரியதோர் மாற்றத்தைத் தோற்றுவித்திருக்கிறார்! அமைச்சரவையில் பதினேழு பேர் புதிய நியமனம் பெற்றிருக்கின்றனர்!

இலாகா மாற்றங்களில், பொருளாதார பொறுப்புக்களைத் தம்மிடத்திலோ அல்லது தமது நேரடிப் பார்வையிலுள்ள இலாகாக்களிடமோ பிரித்துக் கொடுத்திருக்கிறார் தலைமையமைச்சர்!

வேலையில்லாத் திண்டாட்டம், தொழிற்கட்சிக்கும்—தொழிற் சங்கங்களுக்குமிடையே வளர்ந்து வரும் கசப்பு நிலைமைகள், நாட்டின் நிதிநிலை பற்றி மக்கள் அதிருப்தி ஆகிய பிரச்சினைகளையொட்டித் தலைமையமைச்சர் வில்சன், இந்த மாற்றங்களைச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த மாற்றத்துக்குப் பிறகு வில்சன் அமைச்சரவை உறுப்பினர்களின் சராசரி வயது 53-ஆக குறைந்திருக்கிறது! இதற்குமுன், சராசரி வயது இன்னும் சற்று உயர்ந்திருந்தது!

சிவசேனையின் அநாகரிகச் செயலை அனுமதிப்பதா?

தேசிய ஒருமைப்பாடு பேசுவோருக்கு அறிஞர் அண்ணா கேள்வி

கோவை, ஆக. 29—

பம்பாயில் தென்னிந்திய மக்களுக்கு எதிராக அநாகரிகக் கொடுஞ் செயல்களில் ஈடுபட்டு வரும் சிவசேனை இயக்கத்தைக் கடுமையாகக் கண்டித்துக் கருத்தறிவித்துள்ளார்—தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள்.

இங்கு, அரசினர் தொழில் நுணுக்கக் கல்லூரியில் அண்ணா அவர்கள் பேசுகையில் சிவசேனை பற்றிக் குறிப்பிட்டுப் பின்வருமாறு கூறினார் :—

'தேசிய ஒருமைப்பாடு குறித்துப் பேசுபவர்களே பிற மாநிலத்தவரைக் கண்டு சகித்துக்கொள்ளாதிருப்பதும், அவர்களுக்குக் கொடுமை இழைப்பதும், இழிவுபடுத்துவதும் கண்டிக்கத்தக்கதாகும். இத்தகைய குறுகிய மனப்பான்மையும், வட்டார இன வெறியும் நிலவும்போது உண்மையான ஒருமைப்பாடு எப்படி ஏற்படும் ?

"நாட்டின் ஒற்றுமையைக் கருதியே, தி. மு. கழகம் தனது பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டது. ஆனால், 'தமிழர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சுதந்தரமாகவும், எல்லா உரிமைகளுடனும் நடத்தப்படுகிறார்கள்' என்ற உணர்வை அவர்கள் மனத்தில் ஏற்படுத்தும் பொறுப்பு மற்ற மாநிலத்தவருக்கு உண்டு.

"நாட்டின் எந்தப் பகுதியிலும் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும், தொழில் நடத்தவும் எல்லா மக்களுக்கும் உரிமை இருக்கவேண்டும்.

"கேரளம், தமிழகம் போன்ற மக்கள் தொகை மிகுந்த மாநிலங்களின் மக்களை, பிற மாநிலங்களில் குடியமர்த்துவது இன்றியமையாததாகும்.

"நாட்டின் ஒருமைப்பாட்டை விரும்பினால், இப்படிப்பட்ட குடியேற்றங்களைத் தடுக்கக்கூடிய கட்டுப்பாடுகள் இருக்கக் கூடாது."

இதற்குப் பிறகாவது, சிவசேனையின் தாக்குதலிலிருந்து பம்பாயவாழ் தென்னக மக்களுக்குப் பாதுகாப்புத் தர மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் முன்வரும் என நம்புகிறோம்.

—கா. க.

வங்காளத் தொழிலதிபர்களுக்கு ஆந்திராவில் நாட்டம்!

அமைதியின்மையும் பூசல்களும் அவர்களை வேறு மாநிலங்களுக்கு 'விரட்டு'கின்றன!

கல்கத்தாவைச் சேர்ந்த சில பெரிய தொழிலதிபர்கள் ஆந்திரத்தில் முதலீடு செய்ய விரும்புவதாக ஐதராபாத் செய்தியொன்று கூறுகிறது.

மேற்கு வங்காளத்தில் நிலவும் அமைதியற்ற தன்மை—அடிக்கடி தோன்றும் பூசல்—போராட்டங்கள் போன்றவைகளால், அங்கே தொழிலுக்கு நிலையான தன்மை கிடைக்காது என்று அவர்கள் அஞ்சுகின்றனர்!

தேவைப்படும் அளவுக்கு நிலம், மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகளை அவர்களுக்குச் செய்துதருவதில், ஆந்திர அரசு ஆர்வம் காட்டுகிறது!

'வங்கத் தொழிலதிபர்கள், ஆந்திரத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளைத் துவக்கலாம்' என்று நம்பப்படுகிறது.

ஐதராபாத் அல்லது விசாகப்பட்டினம் ஆகிய 'நகரங்கள், அவர்களை வெகுவாகக் கவருகின்றன!

சில திங்களுக்கு முன்னர் கல்கத்தாவுக்குச் சென்ற மைசூர் முதலமைச்சர் நிசலிங்கப்பா, அங்கே உள்ள தொழிலதிபர்களைக் கன்னட மாநிலத்தில் முதலீடு செய்யும்படி வேண்டுகோள் விடுத்துப் பேசியிருப்பதும் அதற்காக அரசாங்க முறையில் முயன்றதும் இங்கு நினைவு கூரத்தக்கது!

கருநாடக முதல்வரின் கண்டனம்

"சிவசேனையின் விரும்பத்தகாத செயல்களை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மத்திய அரசும், மாராட்டிர அரசும் மேற்கொள்ள இதுவே தக்க தருணம்"

என்று, கருநாடக முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா வலியுறுத்தினார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் சிவசேனை குறித்து மேலும் குறிப்பிட்டதாவது :—

"கடந்த நாலைந்து மாத காலமாக பம்பாயிலுள்ள தென்னாட்டு மக்கள் துன்புறுத்தப்படுவதாக அன்னாருடம் எண்ணற்ற கடிதங்களும், தந்திகளும், முறையீடுகளும் வந்து கொண்டிருக்கின்றன.

"பம்பாய் நகரம், இந்தியா முழுமைக்குமே சொந்தமானதாகும்; ஒரு குறிப்பிட்ட மொழியினருக்கு மட்டுமே அது சொந்தமாகாது. அங்கு, தொழில் நடத்தவோ, வசிக்கவோ அனைவருக்கும் உரிமையுண்டு.

'நாட்டின் ஒன்றுபட்ட முயற்சியினாலேயே இத்தகைய பெரிய தொழில் நகரங்களெல்லாம் உருவாகின்றன. பம்பாயைப் பொறுத்தவரை அது மூன்று மொழிக்காரர்களுக்கும் தலைநகரமாக உள்ளது. மாராட்டிரம்—குசராத்தி—கன்னடம் ஆகிய மொழிகளைப் பேசுவோரும், தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களும், வடக்கேயிருந்தும் கிழக்கேயிருந்தும் வந்தவர்களும் சேர்ந்து உருவாக்கிய பல மொழி—பல இன அடிப்படையிலான நகரமாகும்.

"சிவசேனைக்குக் காங்கிரசுக்காரர்களும் பின்பலமாக இருப்பார்கள் என்பதை நான் நம்பவில்லை. அப்படிக் கூறுவது உண்மையானால், அதுவே காங்கிரசு அழிவுக்கு ஆரம்பமாகும். இதில் எந்தக் காங்கிரசுக்காரர்கள் ஈடுபட்டாலும் அவர்களை நான் வெறுக்கிறேன்."

சிவசேனைக்கு அமெரிக்கப் பணம்

சென்னை, ஆக. 29—

சிவசேனை நடவடிக்கைகளை நேரில் கண்டறிவதற்காக பம்பாய் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெ. கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.), உமாநாத் (இடது கம்.) ஆகிய இருவரும், தாம் கண்டு கேட்டறிந்தவற்றை விளக்கினர்.

"பம்பாயின் பல பகுதிகளிலும் வாழ்ந்துவரும் தென்னிந்தியர்களுக்கு எதிராக வெறுப் புணர்ச்சியைக் கிளப்பிவிட்டு, அவர்கள்மீது பழி தூற்றுவதற்கென்றே ஓர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது ; 'மகாராட்டிர மக்களின் மோசமான நிலைக்குத் தென்னிந்தியர்களே காரணம்' என்று குற்றஞ்சாட்டுகிறது அந்த இயக்கம். வன்செயல்கள் மூலம் அங்கு வாழும் சிறுபான்மையினரான தென்னிந்தியர்களை அழித்தொழிக்க இந்த இயக்கம் முனைந்துள்ளது"

என்று அவர்கள் கூறினர் ; அவர்கள் மேலும் கூறியதாவது :—

"சிவசேனாவின் வன்செயல்களை அதிகார வட்டாரம் தடுத்து நிறுத்தாமலிருப்பது மட்டுமல்ல—உற்சாகமும் மூட்டிவருகிறது. இந்த நிலையில் அங்குள்ள தென்னிந்தியர்கள் தெருவில் நடமாடுவதற்கும் அஞ்சுகின்றனர். 'எந்த நேரத்தில் எந்த இடத்தில் தாக்கப்படுவோமோ' என்று அஞ்சுகின்றனர். அவர்கள் உயிருக்கு அங்கு பாதுகாப்பு இல்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

தீயணைப்புப் பணிக்குப் புதிய கருவி

எரிந்துகொண்டிருக்கும் கட்டிடங்களுக்குள் நுழைந்து தீயை அணைப்பதில் ஈடுபட்டிருக்கும் தீ அணைப்பு ஊழியர்கள், கட்டிடத்துக்கு வெளியே உள்ள ஏனைய ஊழியர்களிடம் இனிப் பேச முடியும். அதற்கு உதவும் வகையில் இங்கிலாந்து தீயணைப்பு அதிகாரியும், பர்மிங்காம் நிறுவன மின்னணு எஞ்சினீயர்களும் சேர்ந்து புதிய வகைக் கருவியை உருவாக்கியுள்ளனர்.

சுவாசிப்பதற்கான முகமூடியை அணிந்து உள்ளே பணியாற்றிக் கொண்டிருக்கும்போது வெளியே உள்ளவர்களுடன் அநேகமாகத் தொடர்புகொள்ள முடியாத நிலை இருந்தது. முகமூடிகள் அவ்விதம் பேச முடியாதபடி இடைஞ்சலாக இருந்ததே அதற்கு காரணமாகும்.

புதிய கருவியானது, சிறிய 'மைக்ரபோன்' அடங்கியதாகும்.

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் இந்தியர்கள்

தென் மாநிலங்களில் மறுவாழ்வளிக்கத் திட்டம்

புதுடில்லி, ஆக. 30—

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படவிருக்கும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிக் குழு ஒன்று இந்தியாவின் தென் மாநிலங்களுக்கு வந்து, தங்களைக் குடியமர்த்துவதற்கு என்னென்ன வசதிகள் உள்ளன என்பதை நேரில் கண்டறிந்து செல்ல அனுமதிக்க வேண்டும்—என்று தூதரகக் குறிப்பு மூலம் இலங்கையை, இந்தியா வற்புறுத்தியுள்ளதாக அதிகாரபூர்வமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தியா வரவிருக்கும் அந்த அகதிகள், தங்களுக்கு அளிக்கப்படவிருக்கும் மறுவாழ்வு வசதிகள் பற்றி மனக்கோட்டை கட்டிக் கொள்ளாமல் இருக்க அவர்களுக்கு உண்மை நிலையைக் காட்டுவதே அந்த யோசனையின் நோக்கமாகும்.

இலங்கை அகதிகளின் முதல் குழு, இலங்கை—இந்தியா ஒப்பந்தப்படி 1968 சனவரியில் தென்னிந்தியாவுக்குவர ஆரம்பிக்கும். சுமார் மூன்றுண்டுக் காலத்தில் 1,35,000 பேர் வந்துவிடுவர்; அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டாக வேண்டும்.

சுமார் 15 ஆண்டுக்காலத்தில் இந்திய மரபினர் மொத்தம் 5,25,000 பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும்.

இலங்கையில் மிஞ்சும் 1,50,000 தமிழரின் எதிர்காலம் பற்றி, இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி இலங்கை செல்லும்போது இலங்கைத் தலைமையமைச்சருடன் விவாதிப்பார்; இந்திரா காந்தியின் வருகைக்கான தேதி குறிப்பிடப்பட்டு வருகிறது.

இலங்கை அகதிகள் பிரச்சினை தேசியப் பிரச்சினை என்று மத்திய அரசாங்கம் கருதுகிறது; எனவே அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான செலவு முழுவதையும் மத்திய அரசாங்கமே ஏற்கும்.

முடிந்த வரையிலும் அந்த அகதிகளுக்கு அவர்கள் முன்னர் செய்துவந்த தேயிலைத் தோட்ட வேலை, ரப்பர் தோட்ட வேலை ஆகியவற்றை அளிப்பதன் மூலம் மறுவாழ்வு அளிக்கப்படும்.

சுமார் 1,000 குடும்பங்களுக்காகத் தமிழ்நாட்டில் 'மண்டபம்' என்னும் இடத்தில் வரவேற்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தவிர, தமிழ்நாடு, மைசூர், ஆந்திரம், கேரளம் ஆகியவற்றில் இடைக்கால முகாம்கள் அமைக்கப்படும்.

இலங்கையிலிருந்து வருவோர் ஒரு குடும்பத்துக்கு ரூ. 4,000-க்கு மேல் எடுத்துவர அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதால், இலங்கை அகதிகளுக்குப் பண உதவி அளிப்பது பற்றியும் புதுடில்லி அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வீட்டு வசதி பற்றிய திட்டங்களையும், வேலை தேடித் தருவது பற்றிய திட்டங்களையும் அதிகாரிகள் தயாரித்து வருகின்றனர்.

தொழில் செய்ய விரும்பும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 5,000 கடன் வழங்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.

அகதிகள் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கான கடன்களும் அளிக்கப்படும்.

அகதிகளுக்கு வேலையளிக்கத் தேயிலை அல்லது ரப்பர் தோட்டங்களை அமைக்க ஐந்து மாநில அரசாங்கங்கள்—(தமிழ்நாடு, மைசூர், குசராத், ஒரிசா, மகாராட்டிரம்)—முன்வந்துள்ளன.

15 ஆண்டுக்கால அளவில் 3,700 ஏக்கரில் தேயிலைத் தோட்டம் அமைக்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே, உடனடியாக ரப்பர்—தேயிலைத் தோட்டங்களில் சுமார் 1,700 தொழிலாளர்கட்கு வேலையளிக்க தென்னிந்திய ஐக்கிய தோட்டக்காரர்கள் சங்கம் முன்வந்துள்ளது.

"தேயிலைத் தோட்டங்களை அதிகரிக்க நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போடப்பட்டுள்ள திட்ட வேலைகள் நிறைவேற்றப்படுமானால், அந்த அகதிகளுக்கு வேலையளிக்க நிறைய வாய்ப்பு இருக்கும்" என்று அதிகாரிகள் நம்புகின்றனர். ஐந்தாண்டு ஆளவில் ஆண்டுதோறும் 24,000 ஏக்கரில் தேயிலைத் தோட்டத்தை அமைப்பதென்பது திட்டக் குறிக்கோளாகும்.

இதற்குத் தேயிலை போர்டுக்கும் அரசாங்கத்துக்கும் ரூ. 46 கோடி செலவாகும்.

நிபுணர்கள் அடங்கிய வேலைக் குழு ஒன்று, ரப்பர் தோட்டங்களுக்கு 85,000 ஏக்கரைக் குறியளவாகச் சிபாரிசு செய்துள்ளது.

தொழிலாளர் நலச் சட்டம்

அரசுத் தொழிலகங்களிலும் செயல்படுத்த ஆய்வு

சென்னை, ஆக. 29—

"அரசுத்துறை நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துவது தொடர்பாக ஆய்வு செய்ய குழு ஒன்றை அமைக்கத் தமிழக அரசு எண்ணியுள்ளது; மாநிலத் தொழிலாளர் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க இந்தக் குழு அமைக்கப்படவிருக்கிறது"

என, அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

"தொழிலாளர் நலச் சட்ட நடைமுறைகளிலிருந்து அரசுத் துறை நிறுவனங்களை விலக்கி வைக்க நியாயமில்லை" என்று மாநில ஆய்வுக் குழு கருதியது.

'ராணி'க்கு வந்த வெட்கம்!

ஐதராபாத் நகரில் நேரு மிருகக் காட்சிசாலையில் உள்ள பத்து வயது யானை 'ராணி'க்கு வெட்கம் வந்துவிட்டது!

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அங்கு சென்றபோது, அவருக்கு மாலையணிவித்து வரவேற்பதற்குள், 'ராணி', நாணத்தால் வாடியதாம்!

இதற்குமுன் எத்தனையோ முக்கியஸ்தர்களுக்கு ராணி மாலை சூட்டியிருக்கிறது!

அது என்னவோ—குடியரசுத் தலைவரைக் கண்டதும் அதற்கு வெட்கம் வந்துவிட்டிருக்கிறது!

அருகில் இருந்த அதிகாரிகளுக்குப் பரபரப்பும் பயமும் வந்துவிட்டது!

மூன்றுவது முறை முயற்சி செய்யச் சொல்லியும், 'ராணி', தட்டுத்தடுமாறியிருக்கிறது!

பின்னர், அவர் பாதி—யானை பாதியாக—எப்படியோ மாலை சமுத்தில் விழுந்திருக்கிறது!

ஆர்தர் பாட்டம்லே—பிரிட்டனின் அடுத்த இந்தியத் தூதுவர்?

அண்மையில் இங்கிலாந்து அமைச்சரவையில் 'ஹெரால்டு வில்சன் அமுலாக்கிய மாற்றத்தினுல் பதவி விலகியிருக்கும் ஆர்தர் பாட்டம்லே, 'இந்தியாவுக்குத் தூதுவராக அனுப்பப்படலாம்' என்று இலண்டன் சிறப்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

இப்போது தூதுவராக இருக்கும் ஜான் பிரீமன், ஒரு பிரபல பத்திரிகையாளர்; உலகம் அறிந்தவர். ஆர்தர் பாட்டம்லேயும், பிரீமன் போலவே அனைவராலும் விரும்பப்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறுகிய கால மருத்துவக் கல்வி

சென்னை, ஆக. 29—

"மருத்துவக் கல்வியில் எல். எம். பி. போன்ற குறுகிய காலப் படிப்பு ஒன்றைத் தொடங்குமாறு இந்தியத் தலைமை அரசு தமிழக அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது" என, நலத்துறை அமைச்சர் சாதிக் பாட்சா செய்தியாளர்களிடம் கூறினர்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"எல். எம். பி. படிப்பு துவக்குவதா அல்லது வேறு வகையான பட்டப் படிப்பைத் தொடங்குவதா என்பது குறித்து தமிழக அரசு ஆய்வுசெய்து வருகிறது. முதலமைச்சர் அண்ணாவுடன் ஆய்வு செய்த பின்னர், இது தொடர்பாக முடிவெடுக்கப் படும். இந்த முடிவு பிறகு தலைமை அரசுக்கு தெரிவிக்கப் படும்."

சென்னையில் வாழ்க்கைச் செலவு இறங்குமுகம்

சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி, ஆகஸ்டு 12-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் ஒரு புள்ளி குறைந்து 700-ல் நின்றது.

மிளகாய், நல்லெண்ணெய் இவற்றின் விலைக் குறைவே இதற்குக் காரணம்.

சேலம் இரும்பின் சிறப்பு!

சேலம் உருக்காலை அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் வேகமாகச் செயல்படுத்தப்படுமெனத் தெரிகிறது!

சேலம் உருக்காலை அமைப்பதால் தென் மாநிலங்களில் மட்டுமன்றி நாடு முழுவதிலுமே இப்போது முடங்கிக் கிடக்கும் பல பொறியியல் தொழில்கள் புத்துயிர்பெறும்!

சேலம் உருக்காலையில் உற்பத்தி செய்ய எண்ணியிருக்கும் கலப்பு உருக்கு, நாட்டில் வேறெங்கும் உற்பத்தியாகவில்லை! எனவே, சேலம் உருக்கு, பிற இடங்களில் உற்பத்தியாகும் உருக்குக்குப் போட்டியாக இராது!

மேலும், சேலத்தில் தயாரிக்க எண்ணியுள்ள கலப்பு உருக்கு வகையை, இப்பொழுது இறக்குமதி செய்தே பெற வேண்டியிருக்கிறது!

இதுமட்டும் நாட்டின் உருக்கு இறக்குமதியில் 30 சதவிகிதத்துக்குமேல் ஆகும். இப்போது அதன் மதிப்பு ரூ. 35 கோடி; பொருளாதார மந்த நிலை இல்லாதிருந்தால், இருமடங்கு இறக்குமதியாகி இருக்கும்!

எல்லாவற்றையும்விட, 'சேலம் உருக்கு மற்றெல்லா இடங்களிலும் உற்பத்தியாகும் உருக்கைவிட விலை குறைவாக இருக்கும்' என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது!

பிலாய் முதலிய உருக்காலைகளுக்கு இரும்புக் கனி கொண்டு செல்ல டன்னுக்கு ரூ. 15-க்குமேல் செலவாகிறது! சேலத்திலோ, இந்தச் செலவு டன்னுக்கு ரூ. 6-க்குள் அடங்கிவிடும்!

எனவே, 'சேலம் உருக்கு மிகவும் மலிவான உருக்கு' என்று பெயரெடுக்கக்கூடிய வழிகள் உள்ளன!

உள்ளாட்சி மன்ற இடைத் தேர்தல்கள்

திருச்சி, ஆக. 29—

"ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் காலியாகியுள்ள இடங்களுக்கு இவ்வாண்டு அக்டோபருக்குள் தேர்தல்களை நடத்திவிட வேண்டும்"

என்று தமிழக அரசு ஆணையிட்டுள்ளதாகத் தெரிகிறது.

1965-ல் உள்ளாட்சித் துறை தேர்தல்கள் நடந்தபின், நாட்டின் அவசர நிலையையொட்டி இடைத் தேர்தல் எதுவும் நடத்தப்படவில்லை.

இந்திரா அரசின் மொழிக் குழப்பம்!

ஒருமைப்பாட்டுக்குப் பதில் வட்டார வேற்றுமையையே வளர்க்கும்

"தேசிய ஒருமைப்பாட்டையும், அந்தஸ்தையும் வளர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, ஒரு பிரதேசத்தின் மொழியை இணைப்பு மொழியாகவோ, அகில இந்திய ஆட்சி மொழியாகவோ ஆக்குவது—1. தேசிய ஐக்கியம்; 2. இந்திய சர்க்காரின் நிர்வாகத் திறமை; 3. அறிவு வளர்ச்சி—ஆகிய மூன்றுக்கும் தீங்கு செய்வதாகும். இந்தி மொழி பேசும் பகுதியினருக்கு இந்த உண்மையைப் பிரதமர் இந்திரா எடுத்துரைக்க வேண்டும்"

என்று, 'தினமணி' (சென்னை: 25–8–67) இதழில் வற்புறுத்தப்பட்டுள்ளது. 'இணைப்பு மொழிப் பேச்சு' என்ற தலைப்பில் அவ்விதழில் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;—

"மொழிப் பிரச்சினை விஷயத்தில் இந்திய சாககாருக்கு இருந்து வரும் மனக்குழப்பம் அனைத்தையும், பிரதம மந்திரி சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் காணலாம்; 'காலவரம்பின்றி மும்மொழி ஏற்பாடு நீடிப்பது நலம்' என்ற கருத்தை அவர் பொதுப்படையாக வெளியிட்டிருக்கிறார்; 'ஆங்கிலம் அவசியமே; ஆனால் இந்திய இணைப்பு மொழி தேவை' என்று கூடவே சொல்லியுள்ளார்.

ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க இயலாது என்பதற்கும், இந்திக்கு எப்படியாவது அந்த அந்தஸ்தைக் கொடுத்துவிட வேண்டும் என்பதற்கும் அவர், தர்க்கரீதியாக ஏற்கக்கூடிய காரண காரியங்களை விளக்கவில்லை!

மேலும், 'இணைப்பு மொழி' என்று சொல்லுகிறவர், அச்சொல்லை, 'ஆட்சி மொழி' என்றும் பொருள்படும் வகையில், ஈரொட்டாகப் பேசியிருக்கிறார்!

இதன் விளைவாக, அவரது சர்க்காரின் கொள்கையைப் பற்றி இந்தி பேசாதோரின் அவநம்பிக்கையும் சந்தேகமும் அதிகரிக்கத்தான் செய்யும்!

இப்பொழுது உள்ள நிலைமையை மூடி மழுப்பி, 'இந்தியை இணைப்பு மொழியாக்குவது தவிர வேறு வழியில்லை' என்ற ரீதியில் பிரதம மந்திரி எண்ணமிடுவதுவிசித்திரமாயிருக்கிறது! இந்தியா அனைத்திடமும் ஒருசேரத் தமக்குள்ள பெரும் பொறுப்பை அவர் போதிய அளவு உணர்ந்து பேசியிருப்பதாகக் காணேம்!

இப்பொழுதுள்ளநிலைமை என்ன? அகில-இந்திய ஆட்சிமொழியாகவும், இணைப்பு மொழியாகவும் இன்று செயல்பட்டு வருவது ஆங்கிலம் ஒன்றுதான். அந்த நிலைமைக்கு இந்தியை உயர்த்துவது இன்னும் நெடுநாளைக்கு சாத்தியப்படாது என்பதை உணர்ந்தாலொழிய, மொழிப் பிரச்சினையின் எந்த அம்சத்திலும் டில்லியிலுள்ள ஆட்சியாளருக்குத் தெளிவு பிறக்காது!

இந்தியை—அதன் அகில இந்தியத் தகுதியை—உத்தரவு போட்டு அல்லது சட்டமியற்றி வளர்த்துவிட முடியாது!

ஆங்கிலத்தின் இப்போதைய உபயோகம் காலவரம்பின்றி நீடிக்கத்தான் வேண்டும்.

இந்தியின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கலாம்; அதற்கு அதிகமாக எதைச் செய்ய முயன்றாலும், நல்ல—திறமைமிக்க ஆட்சி சாத்தியமில்லாமற் போய்விடும்! அறிவியல் துறையில் நாம் வெகு தூரம் பின்னடைந்து விடுவோம்!

'ஆங்கிலம் நீடித்து இணைப்பு மொழியாக இருக்கமுடியாது' என்பதற்குப் பிரதம மந்திரி கூறும் காரணம், சிறிதும் ஒப்புக் கொள்ளக்கூடியதல்ல!

"பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் நெடுக அதுவே ஆட்சிமொழியாக இருந்தபோதிலும், இன்று ஆங்கிலம் அறிந்தவர்கள் ஒரு சதத்துக்குச் சிறிது கூடுதலாக மட்டுமே இருப்பர்; குடியானவர்களுக்கு ஆங்கிலம் பழக்கப் படப் போவதில்லை; எனவே, அது இணைப்பு மொழியாக இருக்க முடியாது" என்கிறார் பிரதமர்.

அவர் தரும் புள்ளி விவரம் சரிதானா என்று முதலில் கவனிக்க வேண்டும். அது சரியாயிருக்கும் எனத் தோன்றவில்லை!

எழுத்தறிவு இல்லாதவர்களையும் சேர்த்துக்கொண்டு, ஒரு மொத்தமாக ஆங்கிலம் அறிந்தோரின் விதாச்சாரத்தைக் கணக்கிடுவது பயனற்றது—பொருளற்றது!

தவிர, ஏதாவது ஒரு மொழியில் வெறும் எழுத்தறிவு உள்ளவர்களுக்கு இணைப்பு மொழியைப் பற்றி லட்சியம் இல்லை. சுமாராகப் படித்தவர்களை—அதாவது ஹைஸ்கூல் படிப்பை முடித்தவர்களை எடுத்துக் கொண்டோமானால், தேசத்தின் எல்லாப் பகுதியினருக்கும் அதிகமாக—பரவலாகத் தெரிந்துள்ள பொது மொழி ஆங்கிலம் ஒன்றுதான் என்பது புலனாகும்.

ஒரு சில இந்தி அபிமானிகள் தவிர, பள்ளி சென்று படிக்கின்ற எல்லோரும் இன்று ஆங்கிலம் பயில்கின்றனர் என்பதையும் மறப்பதற்கில்லை!

அவர்களில் ஒரு சிறிய விதாசாரத்தினருக்குக்கூட, தேசம் எங்கும் தெரிந்த மொழி இந்தி என்று சொல்லக்கூடிய நிலைமை இன்னும் ஏற்பட்டாகவில்லை!

இந்தி இன்னும் பிராந்திய மொழியாகத்தான் இருந்துவருகிறது.

இராஜஸ்தானிகள்—பீகாரில் மைதிலி மொழி பேசுகிறவர்கள்—உருதுவை தாய்மொழியாகக் கொண்டவர்கள் போன்றோர், தமது மொழிகளையும் இந்தியில் சேர்த்துக் கணக்கிடுவதை ஆட்சேபிக்கின்றனர்! இவற்றையெல்லாம் அலட்சியம் செய்துவிட முடியாது!

'ஆங்கிலத்தின் இப்போதைய உபயோகம் மாறுதலின்றி நீடிக்க வேண்டும்' என்பது தமிழ்நாட்டின் கோரிக்கை மட்டுமல்ல—மேற்கு வங்காளம், அசாம், நாகாலாந்து, ஒரிசா, ஜம்மு-காஷ்மீர், மைசூர், ஆந்திரா, கேரளம் ஆகியவையும், மகாராட்டிரத்திலும், குஜராத்திலும் கணிசமான பகுதியினரும் அதேமாதிரி நினைக்கிறார்கள்!

ஆகவே, அசட்டுத்தனமான முடிவுகளை எடுத்தால் இந்தியின் மூலம் இந்தியாவின் ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குப் பதிலாக, பிரதேச வேற்றுமை உணர்ச்சிகளையே அது வளர்க்கும்!"

நீண்ட பயணம் செய்வோருக்கு நன்மை

விடுமுறையில் விருப்பம்போல் பயணம் செய்ய சலுகைக் கட்டணம்

சென்னை நகர அரசு பஸ்ஸில் கட்டண மாறுதல்

சென்னை, ஆக. 31—

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி, அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாள் முதல் சென்னை நகரில் ஓடும் அரசு பஸ்களின் கட்டண மாறுதல்கள் நடைமுறைக்கு வரும்.

இதுபற்றி அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தெரிவித்ததாவது :—

"சென்னை நகரிலும், நகரைச் சுற்றி 15 மைல் தொலைவில் உள்ள எண்ணூர், அம்பத்தூர், படப்பை ஆகிய இடங்களுக்குச் செல்லும் பஸ்களிலும் புதிய பஸ் கட்டண மாறுதல் செயல்படுத்தப்படும்.

இப்புதிய கட்டண விகிதங்களால் நீண்ட தொலைவு பயணம் செய்வோருக்கு நன்மை கிடைக்கும்.

ஒரு சில கட்டங்களுக்கு மட்டும் 2 அல்லது 3 காசுகள் உயர்ந்த போதிலும், பெரும்பாலான கட்டங்களுக்குக் கட்டணம் குறைகிறது. சில கட்டங்களில் தற்போதுள்ள கட்டணங்களே நீடிக்கும்.

புதிய கட்டண மாறுதலால், கண்டக்டருக்கும் பயணிகளுக்கும் இடையில் சில்லறை (காசு) தகராறு ஏற்படுவது தவிர்க்கப்படும்."

தற்போதுள்ள கட்டண விகிதமும், மாறுதல் செய்யப்படவிருக்கும் கட்டண விகிதமும் வருமாறு :-

இப்போதுள்ள கட்டணம்		புதிதாக உத்தேசித்துள்ள கட்டணம்
10	...	10
14	...	15
18	...	20
22	...	20
26	...	25
30	...	30
34	...	35
38	...	35
42	...	40
46	...	45
50	...	முடிவாகவில்லை
54	...	50
58	...	55
62	...	60
66	...	55
70	...	முடிவாகவில்லை
74	...	70
78	...	75
82	...	80
86	...	85
90	...	முடிவாகவில்லை
94	...	90
98	...	95

மேற்கண்டுள்ள கட்டண விகிதங்களில் சில மாற்றங்கள் செய்யப்படலாம்.

கட்டண மாறுதலால் கட்டங்கள் (ஸ்டேஜ்) மாறுது.

விருப்பம்போல் பயணம்

ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை நாட்களிலும் சென்னை நகருக்குள் விருப்பம்போல் பயணம் செய்வதற்குத் தனி டிக்கெட் வழங்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது; அதாவது, ஒருவர் ரூ. 1.50 கட்டணம் செலுத்தி அந்த டிக்கெட்டைப் பெற்று, ஒரு நாள் முழுவதும் நகர எல்லைக்குள் எந்த இடத்திற்கும் அரசு பஸ்ஸில் பயணம் செய்யலாம்.

இந்த ஏற்பாடும் செப். 15-ஆம் நாள்முதல் நடைமுறைக்கு வரும்.

"இந்தப் புதிய கட்டண மாறுதலால் இலாபம் வருமா இழப்பு வருமா என்பது பற்றிக் கருதவில்லை; பொதுமக்களின் நன்மையைத்தான் முக்கியமாக அரசு கருதுகிறது" என்று அமைச்சர் கூறினர்.

அமைச்சர் மாதவன்

டில்லி பயணம்

சென்னை, ஆக. 31—

தமிழகச் சட்ட அமைச்சர் செ. மாதவன், புதுடில்லியில் இன்று முதல் நடைபெறவிருக்கும் சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வானூர்தி மூலம் இன்று புறப்பட்டுச் செல்வார், செப். 2-ம் நாள் தமிழகம் திரும்புவார்.

'புதுடில்லியில் வள்ளுவர் சிலை அமைக்க வேண்டும்'

இந்திக் குறள் வெளியீட்டு விழாவில் ம.பொ.சி. வற்புறுத்தல்

சென்னை, ஆக. 29—

திருக்குறளின் இந்தி மொழி பெயர்ப்பு நூல் இன்று வெளியிடப்பட்டது.

இந்திய அரசின் துணைக் கல்வியமைச்சர் திரு. ஷேர்சிங் அந்த நூலை வெளியிட்டார்.

இந்த வெளியீட்டு விழா, மவுண்ட்ரோடு பாலர் அரங்கில், திரு. கா. அப்பாதுரையார் தலைமையில் நடைபெற்றது.

திரு. ம. பொ. சிவஞானம் பேசுகையில், மொழிப் பிரச்சினை ஒருபுறமிருந்தாலும், நாட்டின் ஒற்றுமைக்கு நாமனைவரும் பாடுபடக்கூடியவர்கள் என்றும், குறளைக் கற்பதன் மூலம் வடநாட்டவரின் மனப்பான்மை மாறக்கூடும் என்றும், திருக்குறள் தமிழர்கட்கு மட்டும் உரிமையானதல்ல என்றும், அது உலகப் பொது மறை என்றும் குறிப்பிட்டார்.

"திருவள்ளுவர் உருவச் சிலையை புதுடில்லியில் நிறுவுவதற்கும், நாடாளுமன்றத்தில் திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைப்பதற்கும் அமைச்சர் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்"

என்று திரு. ம. பொ. சிவஞானம் கேட்டுக்கொண்டார்.

திருக்குறள் பிரசார சங்கத்தின் அமைப்பாளரான திரு. ஜி. வி. பிள்ளை, இந்தச் சங்கம் வட நாட்டில் திருக்குறளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறினர்.

இந்தியில் குறளை மொழி பெயர்த்து முடிக்கத் தமக்கு நான்கு ஆண்டுகள் முழுமையாகத் தேவைப்பட்டன என்று தெரிவித்தார்—நூலாசிரியரான திரு. எம். ஜி. வெங்கடகிருஷ்ணன்.

தொழில் மந்தமா?

அர்த்தமற்ற கூச்சலுக்கு அமைச்சர் பதில்

புதுடில்லி, ஆக. 31—

"தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தொழில் மந்தமும், அதனுல் தொழில் உற்பத்தியில் பாதகம் ஏற்பட்டுள்ளதா?" என்று இங்கு செய்தியாளர்களால் கேட்கப்பட்டபோது, 'அப்படி ஒன்றும் இல்லை' என்று அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் மறுத்தார்.

"தொழில் மந்தமும் அதனுல் உற்பத்திக் குறைவும் இந்தியா முழுவதும் உள்ள தற்போதைய பிரச்சினையாகும்; தமிழகம் மட்டும் அதற்கு விதி விலக்கு அல்ல" என்றும் அமைச்சர் கூறினர்.

பஸ் தேசிய மயம்

"75 மைலுக்கும் தொலைவில் உள்ள பஸ் வழித் தடங்களைத் தமிழக அரசு தேசியமயமாக்கியிருக்கிறது. இதன் விளைவைப் பார்த்துக்கொண்டு, படிப்படியாக பஸ் தொழில் தேசிய மயமாக்குவது விரிவாக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

பட்டம் பெறும் மாணவர்கட்குத் திருக்குறள் பரிசு

சென்னை, ஆக. 31—

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு பட்டம் பெறும் ஒவ்வொரு பட்டதாரியும், பட்டத்துடன் 'திருக்குறள்' நூல் ஒன்றையும் பரிசாகப் பெறுவார்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தமிழ்நாடு தெய்வீகப்பேரவை இப்பரிசினை வழங்குகிறது.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ள டாக்டர் மு. வரதராசனாரின் தெளிவுரையுடன் கூடிய திருக்குறள் வழங்கப்படுகிறது.

அண்ணா ஆட்சிக்கு ஜோதிபாசு பாராட்டு

சென்னை, ஆக. 30—

"மதுரைக்குச் செல்வதற்கு முன்னர் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரையைச் சந்தித்துப் பேசினேன்; சில கொள்கைகளில் எங்களிடையே கருத்து ஒற்றுமை இருப்பதைக் கண்டேன்.

"தேர்தலின்போது மக்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் தி. மு. க. அரசு கவனம் செலுத்தி வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதில் தி. மு. க. ஆட்சி வெற்றிபெற வேண்டும் என்று விழைகிறேன்"

மேற்கு வங்கத் துணை முதலமைச்சர் திரு. ஜோதிபாசு, சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'திரு' -- 'திருமதி' -- 'செல்வி' அடைமொழிகளுக்குப் பன்மை

சென்னை, ஆக. 31—

அரசுக் கடிதப் போக்குவரத்துக்களிலும், ஆவணங்களிலும் இந்திய மக்கள் ஒருவருக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பிடும்போது கீழ்க்கண்ட சொற்களைப் பன்மை அடைமொழிகளாகக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறது :—

'திரு' என்பதற்குப் பன்மை வடிவம் 'திருவாளர்கள்'; 'திருமதி'க்குப் பன்மை வடிவம் 'திருமதியர்'; 'செல்வி'க்குப் பன்மை வடிவம் 'செல்வியர்'.

கம்பெனிகள், நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும்போது, 'ஸ்ரீ' என்றும் 'மேசர்ஸ்' என்றும் சொல்லப்பட்டு வந்ததற்குப் பதிலாக, 'திரு' என்றே பயன்படுத்துமாறும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எடுத்துக்காட்டாக, 'திரு. கல்யாண் அண்டு கம்பெனி' என்று சொல்லலாம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

1--9--67

திருவொற்றியூர்

கலைவாணர் என். எஸ். கே. நினைவு மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு புகைவண்டி நிலைய சாலையில்; தலைவர் : எம். மாணிக்கம்; பேசுவோர் : க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., டி. வி. நாராயணசாமி, எ. எஸ். கோபால் பி.எஸ்சி., பி.காம்., வை. பார்த்தசாரதி, எஸ். ஐ. வெங்கட்ராமன், எஸ். கண்ணப்பா.

திருவளர்ச்சிப்பட்டி

கலைஞர் கருணாநிதி மன்றத் துவக்க விழா; மாலை 6-மணிக்கு; தலைவர் : ச. ஆரோக்கியசாமி; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., வி. சா. இளஞ்செழியன் எம்.எல்.ஏ., அ. நடராசன், வி. எம். கணேசன், கூ. மு. பெரியசாமி, கோ. இராமானுசம், சி. கன்னையன், தமிழ்மாறன், ச. கணேசன், கு. இராமசாமி, அ. சண்முகம், எஸ். எம். பீர்முகமது, செபஸ்தியான்.

2--9--67

புதுவை 3-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு முத்தால்பேட்டை பாரதிதாசன் தெருவில்; தலைவர்: கு. முருகையன்; பேசுவோர் : க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., இரெ. இளம்வழுதிஎம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., எம். ஏ. சண்முகம், ஜி. பெருமாள்ராசா எம்.எல்.ஏ., சி. பி. திருநாவுக்கரசு பி.காம். பி.எல்., வெ. சிங்காரம், இரெ. பழனிவேல், ரெமி. இஞ்ஞாசு.

செஞ்சி

நகர தி.மு.க. சார்பில் சென்னை மேயர் இரா. சம்பந்தம் அவர்களுக்குப் பாராட்டு; மாலை 6 மணிக்கு பெரியகரம் காந்தி கடைவீதியில்; தலைவர் : பி. அர்ச்சுனன்; பாராட்டுவோர் : ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., ஈ. எம். நடராசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.ஏ., வி. முனுசாமி பி.காம், பி.எல்., எம்.எல்.ஏ., ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பிஎல்., எம்.சி., கே. பாண்டுரெங்கன் பி.ஏ., பி.எல்.

ஈரோடு

நகர தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு இரயில்வே காலனி மைதானத்தில்; தலைவர் : பி. ஓய். இப்ராகிம்; பேசுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, பி. ஏ. சாமிநாதன் எம்.பி., மு. சின்னசாமி எம். எல். ஏ., சேதுபாஸ்கரன் எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஓ., ப. ச. விசுவநாதன், நா. நடேசன்.

பள்ளிப்பட்டு

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர் : எஸ். ஏ. அமீது; பேசுவோர் : அமைச்சர் சத்தியவாணிமுத்து, சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு பி.ஏ., ஏ.எல்.சி. கிருட்டினசாமி, தம்பிதாசன், பாலகிருட்டினன். எஸ். இராதா, ஏ. ப்ரந்தாமன் பி.எஸ்சி., பி. கோவிந்தசாமி, கோவிந்தராசன்.

கலைவாணர் விழா

கலைவாணரின் 11-வது ஆண்டு நினைவு நாள் விழா 1—9—67 மாலை 5-30 மணிக்கு, தியாகராயநகர் வாணிமகாலில் அமைச்சர் சாதிக் பாட்சா தலைமையில் நடைபெறும்; ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., டி. கே. சண்முகம், எஸ். எஸ். இராசேந்திரன் மற்றும் பலர் சிறப்புரையாற்றுவர். 'மேஜர் சந்திரகாந்த்' நாடகம் நடைபெறும்.

அறிஞர் அண்ணா

சுற்றுப்பயணம்

செப். 1 காலை 10 மணி: நல்லாத்தூர்; பகல் 12 மணி: பாண்டிச்சேரி; மாலை 5 மணி: விருத்தாசலம்—வழக்கறிஞர் சங்க வரவேற்பு; 6 மணி: அரசு உயர்நிலைப் பள்ளி துணைக் கட்டிடத் திறப்புவிழா; 6-30 மணி: ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; இரவு 7-30 மணி: நல்லூர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 8-30 மணி: விருத்தாசலம்—பொதுக்கூட்டம்.

குழுக் கூட்டங்கள்

"திருச்சி நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் 2—9—67 இரவு 10-மணிக்கு நகராட்சி சத்திரத்தில் எம். இராமையா பி.ஏ. பி.எல். தலைமையில் நடைபெறும்" என்று நகரச் செயலாளர் அ. நடராசன் அறிவிக்கிருர்.

சென்னை 19-வது வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இரவு 8-30 மணிக்கு பந்தர் தெரு, 39-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

பர்மா எம். ஜி. ஆர். மன்றத்தின் ஏற்பாடு

சென்னை, ஆக. 25—

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த நாள் விழாவை, பர்மா தமிழர்கள் வாழும் சென்னை 1-வது வட்டம் தண்டையார் பேட்டை பர்மா நகரில் மிகச் சிறந்த முறையில் கொண்டாடுவதற்காக பர்மா எம்.ஜி.ஆர். மன்றம், நகரிலுள்ள பர்மா தமிழர்களை ஒன்று திரட்டி முடிவெடுத்தது.

விழாவை மிகச் சிறந்த முறையில் கொண்டாடுவதென்றும், விழாவில் அமைச்சர்களை வரவழைப்பதென்றும் கீழ்க்கண்டவர்களை விழாக் குழுவினர்களாக பர்மா எம். ஜி. ஆர். மன்றம் நியமித்துள்ளது.

விழாக் குழுத் தலைவராக எம். ஆர். புருசோத்தமனர், செயலாளராக எம். பெருமாள், பொருளாளராக எம். பி. கிருஷ்ணன், கூட்டுச் செயலாளராக கா. சமது, கணக்குத் தணிக்கையாளராக எஸ். வி. சேகர், உறுப்பினர்களாக ஆர். டி. மூர்த்தி. எஸ்.ஜே. நாதன், விருதை வீரமணி, டி. இராமகிருட்டினன், சொ. விசுவநாதன், ஏ. குருசாமி, செல்வராசு, ஏ. லூர்து, பி. இராமையா, கோபால் ஆகியோரை நியமித்துள்ளது.

இரங்கூன்தலைநகரிலுள்ள பர்மா எம். ஜி. ஆர். மன்றம், அண்ணா விழாவுக்கான தீவிர ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை அண்ணா மலர் வெளியிட்டு பர்மிய மாநகரே வியக்கும் வண்ணம் கொண்டாடி வருகிறது.

சிவசேனைக்கு அமெரிக்க...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பயங்கர நிலைக்கு அஞ்சி சிலர் பம்பாயைவிட்டே போய் விட்டார்கள்; மற்றவர்கள் நகரின் பாதுகாப்பான பிற பகுதிகட்குக் குடிபெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

"இந்தச் சிவசேனைக்குப் பெரிய வணிகர்கள் குழு பின்பலமாக இருந்துவருகிறது. இந்த வணிகர் குழுவைச் சேர்ந்த ஒரு குழுவினர், அமெரிக்க மத்திய துப்பறியும் (சி.ஐ.ஏ) நிறுவனத்திடமிருந்து ஏராளமான பண உதவி பெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) [illegible]